**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.624/2018**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ஆனந்தக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **மணிநாடார்** | **Calling** | : | **கடைத்தொழில்** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **62** |
| | | | **Dated** | : | **02.06.2025** |

**02.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திரு.ஆனந்தக்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாதாளிகாளியம்மன் கோவில் அருகே குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். நான் தொழில் சம்மந்தமாக அடிக்கடி வசூலுக்கு செல்வேன். கடந்த 18.9.2018 ம் தேதி செவ்வாய்கிழமை நான் வசூலுக்காக நாமக்கல், ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய இடங்களுக்கு சென்றேன். அன்றைய தினம் வசூலை முடித்து விட்டு இரவு 09.30 மணியளவில் ஈரோட்டிலிருந்து திண்டுக்கல் வருவதற்காக பேருந்து ஏறினேன்.அன்றைய தினம் இரவு 10.30 மணிக்கு நான் பேருந்தில் வந்து கொண்டிருந்த போது எனது மகன் எழிலரசனுக்கு போன் செய்து வசூல் முடித்து வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறேன், எவ்வளவு நேரமானாலும் வீட்டிற்கு வந்து விடுவேன் என்று தகவல் சொன்னேன். இரவு 01.30 மணிக்கு நான் ஆரியபவன்

பேருந்து நிறுத்தத்தில் இறங்கி அபிராமி அம்மன் கோவில் வழியாக வந்து பேட்டா சூ கடை அருகே வந்து கொண்டிருந்த போது நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது மூன்று நபர்கள் ஒரு இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார்கள். அவர்கள் என்னிடம் நான் அணிந்திருந்த செயின், மோதிரம் மற்றும் நான் வைத்திருந்த செல்போன் ஆகியவற்றை கேட்டார்கள். நான் தர முடியாது என்று சொன்னேன். அவர்கள் மூவரும் என்னிடம் பொருள்களை பறிப்பதற்காக சண்டை போட்டார்கள். அதில் எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது. அவர்கள் என்னிடம் சண்டையிட்டு என்னிடமிருந்த செயின், மோதிரம் மற்றும் செல்போனை பறித்துக்கொண்டார்கள். மேலும் நான் பாக்கெட்டில் அன்றைய தினம் வசூல் செய்த பணம் ரூ.6,500 த்தையும் பறித்துக்கொண்டார்கள். நான் அவர்களிடம் என் நகைகளையும், பணத்தையும் திருப்பி கேட்ட போது சண்டை போட்டார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் அந்த சண்டையின் போது என்னை பிடித்துக்கொண்டார்கள்.மற்றொரு நபர் சாலை அருகே ரோடு போடுவதற்காக வைத்திருந்த கல்லை எடுத்து எனது இடது பக்க தலையில் போட்டு விட்டார். ( **சாட்சி தனது கையை வைத்து இடது பக்க நெற்றியில் ஏற்பட்ட காயத்தை காண்பித்தார்)** கல்லை போட்ட நபர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும். அவர்கள் என்னிடமிருந்து பொருள்களை பறித்துக்கொண்டு தாக்கிவிட்டு சென்று விட்டார்கள். அதன் பின்ன அங்கிருந்த Watch man ஒருவரின் உதவியோடு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை எனது மகன் என்னை எழுப்பினார். எதிரிகள் என்னிடம் பொருள்களை பறித்த போது அடித்ததில் காலை நான் இரத்த வாந்தி எடுத்து விட்டேன்.நான் நடந்த விபரத்தை எனது மகனிடம் கூறி அதன் பின்னர் கோவிந்தாபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு நடந்த சம்பவத்திற்காக எனது மகன் புகார் கொடுத்தார். எதிரிகள் என்னை அடித்ததில் முகவாதம் ஏற்பட்டு ஷிபா மருத்துவமனையில் 10 நாள்கள் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலிசார் என்னை இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். என்னிடமிருந்து பறித்த பொருள்களை நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இடைக்காலமாக பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன், மோதிரம் மற்றும் செயினை தான் பெற்றுக்கொண்டேன். ( **அந்த புகைப்படம் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் கடந்த 11.10.2018 ம் ஆண்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார் என்றால் சரிதான். என்னை ஒரு முறை

தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணோ அல்லது நிறமோ அல்லது வேறு அடையாளமோ போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.இவ்வழக்கு சொத்துக்கள் எனக்கு தான் சொந்தமானது என்பதற்கு எந்த விதமான ஆவணங்களையும் நான் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது 161(3) வாக்குமூலத்தில் வாட்ச்மேன் உதவியுடன் நான் வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளேன் ஆனால் அவரது பெயர் மற்றும் முகவரி எதும் கூறவில்லை என்றால் சரிதான்.போலிசார் விசாரணையில் எதிரிகளின் அடையாளங்கள் எதும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அடிபட்டு மருத்துவமனையில் இருந்ததால் என்னால் சொல்ல இயலவில்லை, CCTV பதிவுகள் கொடுத்தேன். இவ்வழக்கின் எதிரிகள் யாரென்று போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. நான் நேரடியாக பார்த்துள்ளேன்.போலிசார் என்னை விசாரிக்கும் முன்பே எதிரிகளை கைது செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனக்கு எதிரிகள் தாக்கியதால் எனக்கு காயம் எதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.எதிரிகள் தான் தாக்கினார்கள்.நான் சொல்வது போல் சம்பவம் எதும் நடைபெறவில்லை என்றாலும், நானாகவே கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. அசா.1 எனது மகன் என்பதாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

S/d. Thiru.C.Dinesh Kumar

Judicial Magistrate No.II

Dindigul.